S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் டிசம்பர் 23 * 2025 * மலர் -1 * இதழ்-205* VOL-1 * ISSUE-205 விலை ரூ.3 * பக்கம் -4

# 60 அரசுப்பள்ளிகளில் 392 புதிய வகுப்பறைகள்!

## ✶ முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்; ✶ 9 காவல் நிலையங்களையும் தொடங்கினார்!!





சென்னை, டிச.23–

தமிழ்நாட்டில் 20 மாவட்டங்களில் உள்ள 60 அரசுப் பள்ளிகளில் 392 புதிய வகுப்பறைகளையும், ஆய்வகக் கட்டடங்களையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும் 9 புதிய காவல் நிலையங்களையும், 3 புதிய காவல் உட்கோட்டங்களையும் திறந்து வைத்தார்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அரசுத் திட்டங்களை தொடங்கிவைத்து வருகிறார். அந்த வகையில் நேற்று முன்தினம் நெல்லைக்குச் சென்றார்.

அங்கு பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார். அத்துடன் நேற்று அரசு நலத்திட்டங்களையும் தொடங்கி வைத்தார்.

அதைப்போல சென்னையில் தலைமைச் செயலகத்தில் இருந்து கொண்டே அவ்வப்போது புதிய திட்டங்களை தொடங்கிவைத்து வருகிறார். அந்த வகையில் இன்று காவல் – சிறைத்துறையிலும், கல்வித்துறையிலும் பல்வேறு கட்டடங்களை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உத்திரமேரூர், வேளாங்கண்ணி மற்றும் பள்ளிப்பாளையம் ஆகிய 3 ஊர்களை தலைமையிடமாகக் கொண்டு 3 காவல் உள்கோட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும் 9 புதிய காவல் நிலையங்களையும் தொடங்கி வைத்தார்.

மேலும் தீயணைப்பு துறை சார்பில் ரூ.16 கோடியில் கட்டப்பட்ட கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

பள்ளிக் கல்வித் துறை சார்பில், 20 மாவட்டங்களில், 60 அரசுப் பள்ளிகளில் 96.49 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 392 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், 4 ஆய்வகக் கட்டடங்கள், 16 மாணவர் , மாணவியர் கழிப்பறைக் கட்டடங்கள், 8 குடிநீர் வசதிப் பணிகள் மற்றும் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 113.68 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் விடுதிக் கட்டடங்கள், பொது நூலக இயக்ககத்தின் சார்பில் 17.82 கோடி ரூபாய் செலவில் 20 மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 68 நூலகக் கட்டடங்கள் மற்றும் கடலூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 1.90 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 கிளை நூலகக் கட்டடங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் திறந்து வைத்தார். மேலும், மயிலாடுதுறை மாவட்ட மைய நூலகத்திற்கு 4.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டினார்.



பல்லடத்தில் வருகிற 29–ந் தேதி நடைபெறுகின்ற தி.மு.க. மகளிர் மண்டல மாநாட்டிற்கான பூமி பூஜையை அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், கயல்விழிசெல்வராஜ் ஆகியோர் தொடங்கி வைத்தனர். அருகில் மேற்கு மண்டல பொறுப்பாளரும், கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி, பிரகாஷ் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், திருப்பூர் செல்வராஜ், அரவக்குறிச்சி இளங்கோ மற்றும் பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை யொட்டி 1,200 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார். அருகில் கலை இலக்கியபகுத்தறிவுபேரவையின்மாவட்டதுணைஅமைப்பாளர்கிரி,நகரபொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



அம்பாசமுத்திரம் அருகே வி.கே.புரம் நகராட்சிக்குட்பட்ட அனவன் குடியிருப்பு பகுதியில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. பொங்கலை யொட்டி கரும்புகள் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

### பாவூர்சத்திரம் அருகே

# பைக் கவிழ்ந்து பள்ளி நிர்வாகி சாவு!

### ஆலங்குளத்தை சேர்ந்தவர்!!

நெல்லை, டிச.23–

பாவூர்சத்திரம் அருகே நான்கு வழிச்சாலையில் பைக் கவிழ்ந்த விபத்தில் ஆலங்குளம் தனியார் பள்ளி நிர்வாகி பரிதாபமாக இறந்தார்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஜோதி நகர் பகுதியை சேர்ந்தவர் ஸ்ரீராம்குமார் (34). இவர் அங்குள்ள துத்திக்குளம் சாலையில்தனியார்மெட்ரிக் பள்ளி நடத்தி வருகிறார் இந்த நிலையில் ஸ்ரீராம் குமார் நேற்று வேலை விஷயமாக பாவூர்சத்திரத்திற்கு சென்றிருந்தார்.

அதன் பின்னர் அங்கிருந்து நான்கு வழிச்சாலை வழியாக ஆலங்குளத்திற்கு பைக்கில் திரும்பி கொண்டிருந்தார். இதையடுத்து மகிழ்வண்ணநாதபுரம் நாகல்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக பைக் நிலை தடுமாறி கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.

இதில்தூக்கிவீசப்பட்ட ஸ்ரீராம் குமார் பலத்த காயமடைந்தார். அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக பாளை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி இன்று காலை ஸ்ரீராம் குமார் பரிதாபமாக இறந்தார்.

இது குறித்து பாவூர்சத்திரம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் ஆலங்குளம் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஏராளமான பக்தர்கள் சண்முக விலாச மண்டபம் முன்பு குவிந்தனர்.



தொடர் விடுமுறையை யொட்டி ஒகேனக்கல்லில் குவிந்த சுற்றுலா பயணிகள் பரிசலில் சென்றும் அருவியில் குளித்தும் மகிழ்ந்தனர்.

### ஜார்க்கண்ட் மாநிலத்தில் அதிர்ச்சி:

# குடிபோதையில் ரெயிலில் இளம்பெண்ணை பலாத்காரம் செய்த ராணுவ வீரர் கைது!

ராஞ்சி, டிச. 23–

ஜார்க்கண்ட் மாநிலம் டட்டிசில்வாய் ரெயில் நிலையத்திற்கு ராணுவத்தினருக்கான சிறப்பு ரெயில் ஒன்று வந்துள்ளது.

அந்த ரெயிலில் 42 வயதான ராணுவ வீரர் ஒருவர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அங்கு காத்து நின்றிருந்த 22 வயது இளம்பெண்ணை, அந்த வீரர் வலுக்கட்டாயமாகப் பிடித்து இழுத்துச் சென்று ரெயில் பெட்டியின் ஒரு பகுதியில் வைத்துப் பலாத்காரம் செய்துள்ளார்.

அப்போது அந்த ராணுவ வீரர் அந்தச் சமயத்தில் மதுபோதையில் இருந்ததாகக்கூறப்படுகிறது. அந்தப் பெண் உயிருக்குப் பயந்து அலறிய சத்தம் கேட்டு, ரெயில் நிலையத்தில் இருந்த பயணிகள் மற்றும் ஊழியர்கள் உடனடியாக போலீசாருக்குத் தகவல் அளித்தனர்.

தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு வந்த ரெயில்வே போலீசார், தப்பியோட முயன்ற அந்த ராணுவ வீரரை மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர். பாதிக்கப்பட்ட இளம்பெண் மீட்கப்பட்டு உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அந்தப் பெண்ணிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில், போலீசார் அந்த ராணுவ வீரர் மீது கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ராணுவ வீரர் தற்போது நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். ராணுவ ஒழுங்கு விதிகளின்படி அவர் மீது துறை ரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரெயில் நிலையங்கள் போன்ற பொது இடங்களிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவது குறித்துச் சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தீவிர விசாரணை நடைபெற்று வருவதாக ஜார்க்கண்ட் மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.



கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலக கூட்டரங்கில், மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் , தலைமையில் நடைபெற்றது. உடன் மாநகராட்சி துணை ஆணையாளர் அ.சுல்தானா, மாநகர தலைமை பொறியாளர் விஜயகுமார், மேற்கு மண்டல தலைவர் கே.ஏ.தெய்வயானை தமிழ்மறை, உதவி ஆணையர் துரைமுருகன், நகரமைப்பு அலுவலர் ராஜசேகரன், துணை தலைமை பொறியாளர் இளங்கோவன், உதவி செயற்பொறியாளர் சவிதா, மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் உள்ளனர்.



சென்னை மாவட்ட சிறப்பு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ராமன் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி, சிந்தாதிரிப்பேட்டை, வார்டு 62, சென்னை தொடக்கப்பள்ளி வாக்குச் சாவடி மையத்தில் நடைபெற்ற வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் மேற்கொள்ளுதல் சிறப்பு முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் குடியிருப்பு வாசிகள் தரும் தகவலின் அடிப்படையில், ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றும் சேவை நடைபெற்று வருகிறது, இதன் ஒரு பகுதியாக, மடிப்பாக்கம் மண்டலம், வார்டு187, 1வது பிரதான சாலை, கிருஷ்ணா நகரில் உள்ள வீட்டிலிருந்து பழைய சோஃபாக்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றப்பட்டன.



கோயம்புத்தூர் மாநகராட்சி, காந்திபுரம், செம்மொழி பூங்காவினை பள்ளி மாணவ, மாணவியர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு, குழந்தைகளுக்கான பூங்காவில் விளையாடி மகிழ்ந்தனர்.



ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட செங்கணாங்கொல்லை தனியார் திருமண மண்டபத்தில், கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு தமிழக முதல்வர் வருகை முன்னிட்டு திருக்கோவிலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.ஆர்.(எ) எம்.ஆர்.ராஜேந்திரன் தலைமையில் ஆலோசனை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வேறு ஒருவரை காதலிப்பதாக கூறி

## திருமணத்திற்கு மறுத்த மகளை கத்தியால் குத்திய தந்தை!

மதுரை,டிச.23–

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வடக்கு தெருவை சேர்ந்தவர் ரமேஷ் (51). இவர்மகள் பிரியங்கா (24). இவர் நர்சிங் படிப்பு முடித்து திருநெல்வேலியில் வேலை பார்த்து வருகிறார். இவருக்கு மதுரை வில்லா புரம் ஓடைக் கரையில் மாப்பிள்ளை பார்த்துள்ளனர். பின்னர் நிச்சயதார்த்தத்திற்கான ஏற்பாடுகள் செய்து வந்தனர். ஆனால் பிரியங்காவுக்கு இந்த திருமணத்தில் விருப்பமில்லை. வேறு ஒருவரை காதலிப்பதாக கூறி வந்துள்ளார். இது தந்தைக்கு பிடிக்கவில்லை.இதுதொடர்பாக அருப்புக்கோட்டையில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்து விசாரணை நடத்தியுள்ளனர். பின்னர் பிரியங்காவை தந்தை ரமேஷ், அண்ணன் பாலமுருகன் இருவரும் மதுரை அவனியாபுரம் எம்.எம்.சி. காலனியில் மூத்த மருமகன் இருளாண்டி வீட்டுக்கு அழைத்து வந்துள்ளனர்.அங்கு வீட்டுக்குள் வைத்து தந்தை ரமேஷும் அண்ணன் பாலமுருகனும் பிரியங்காவை சரமாரியாக தாக்கி கத்தியால் குத்திவிட்டு ஓடிவிட்டனர். இதில் படுகாயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் மயங்கி விழுந்த பிரியங்காவை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தனர்.இது குறித்து இருளாண்டி அவனியாபுரம் போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து பெண்ணின் தந்தை ரமேஷை கைது செய்தனர். அண்ணன் பாலமுருகனை தேடி வருகின்றனர்.

## தோட்ட வேலைக்கு சென்ற முதியவர் மயங்கி விழுந்து சாவு!

போடி, டிச. 23

போடிவஞ்சிஓடைதெருவைசேர்ந்தவர்முத்துச்சாமி மகன் முத்துக்காளை (72). இவருக்கு சொந்தமான தோட்டம் போடி அருகே ஊத்தாம்பாறை புலத்தில் உள்ளது. இந்த தோட்டத்தில் முத்துக்காளை வேலை செய்து கொண்டிருந்தார்.

இவரது மனைவி சாப்பாடு எடுத்துச் சென்று பார்த்தபோது அவரை காணவில்லை. தோட்டத்தில் தேடி பார்த்தபோது முத்துக்காளை மயங்கி கீழே விழுந்து இறந்து கிடந்தார். இதுகுறித்து புகாரின் பேரில் போடி தாலுகா காவல் நிலைய போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

## பழனியில் தெலுங்கானா பக்தர் சாவு!

பழனி டிச 23

பழனி முருகன் கோவிலுக்கு தெலுங்கானா மாநிலம் ரங்கா ரெட்டி மாவட்டத்தைச் சேர்ந்த அக்குலா ரவிந்தர் என்பவர் வந்திருந்தார். பின்பு அவர் படிப்பாதை மூலம் கோவிலுக்கு சென்றார்.

தரிசனவரிசையில் காத்திருக்கும் பொழுது திடீரென அவருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. உடனடியாக அவர் பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கே அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்ததாக கூறினர்.

இது பற்றி பழனி அடிவாரம் போலீசார் விசாரணை மேற்கொண்டனர்

## வாலிபரிடம் செல்போன் பறித்த 2 பேர் கைது!

வத்தலக்குண்டு,டிச.23–

திண்டுக்கல் மாவட்டம் பிலீஸ்புரம் பகுதியை சேர்ந்தவர் குருநாதன் (23) பெரியகுளம் சாலையில் உள்ள ஒரு சூப்பர் மார்க்கெட் அருகே செல்போன் பேசிக் கொண்டிருந்தார் அப்போது அங்கு வந்த இரண்டு பேர் அவசரமாக பேச வேண்டுமென அவரது செல்போனை வாங்கியுள்ளனர். செல்போன் பேசுவது போல் நடித்து திடீரென செல்போன் உடன் தப்பி ஓடி உள்ளனர்.


விலை உயர்ந்த ஐ போன் ரக செல்போனைப் மர்ம மனிதர்கள் பறித்து சென்றதால் அதிர்ச்சி அடைந்த குருநாதன் வத்தலக்குண்டு காவல் நிலையத்தில் புகார் அளித்தார்

இதனைத் தொடர்ந்து தொழில்நுட்ப உதவியுடன் செல் போன் கொள்ளைகளை தேடி வந்த போலீசார் வத்தலகுண்டு புறவழிச்சாலை பகுதியில் பதுங்கி இருந்த இரண்டு பேரை சுற்றி வளைத்து பிடித்து செல்போனை மீட்டனர்

இதனை தொடர்ந்த செல்போன் கொள்ளையில் ஈடுபட்ட காந்திநகர் பகுதியை சேர்ந்த ராஜேஷ் (39) மற்றும் விக்கிரம ங்கலத்தைச் சேர்ந்த கணேசன் (38) ஆகிய இருவர் மீதும் வழக்கு பதிவு செய்த போலீசார் அவர்களை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## "ஜூபிலண்ட் தமிழ்நாடு 2026" தமிழ்நாட்டை உலகளாவிய வணிக மற்றும் தொழில் மையமாக மாற்றும் தளம். "டைட்டில் பார்ட்னராக கார்த்திபுரம் இணைப்பு" !

கோவை டிச.23



கோவையில் நடைபெற்ற முந்தைய இரண்டு வெற்றிகரமான பதிப்புகளின் தொடர்ச்சியாக தொழில், வணிகம், முதலீடு மற்றும்அறிவுப்பதிவு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் தமிழ்நாட்டின் முன்னணி உலகளாவிய வணிகத்தளமாக ஜூபிலண்ட் தமிழ்நாடு தன்னை நிலைநிறுத்தி வருகிறது. இதற்கு முன்பு நடந்த 2024 மற்றும் 2025 ஆகிய இரண்டு பதிப்புகளில் இணைந்து 39 ஆயிரம் தொழில் பார்வையாளர்கள், 400 ஸ்டால்கள், 75 சிறப்பு பேச்சாளர்கள், 30 ஆதரவாளர்கள் மற்றும் 22 நாடுகளைச் சார்ந்த 250 சர்வதேச பிரதிநிதிகள் பங்கேற்று ஜூபிலன்ட் தமிழ்நாட்டை ஒரு முக்கிய வணிக சந்திப்பு தளமாக உருவாக்கியுள்ளது. தொழில் முனைவோர், சிறு குறு நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் மற்றும் கொள்கை வடிவமைப்பாளர்கள் பங்கேற்கும் வகையில் ஜூபிடென்ட் தமிழ்நாடு 2026 நடைபெற உள்ளது. 350 க்கும் மேற்பட்ட கண்காட்சி ஸ்டால்கள்மூலம் விவசாயம்,துணி நூல், பொறியியல், எலக்ட்ரானிக்ஸ், ஆட்டோமோட்டிவ், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், சுகாதாரம், சுற்றுலா போன்ற முக்கிய துறைகளின் நுணுக்கங்களை காட்சிப்படுத்தப்பட உள்ளது. தமிழ்நாட்டின் தொழில் மற்றும் உற்பத்தி வளர்ச்சியை வலுப்படுத்தும் வகையில் தனிப்பட்ட "இண்டஸ்ட்ரியல் சப்மிட் "நடைபெற உள்ளது. 200 ஏக்கர் பரப்பளவில் கோயமுத்தூரில் புதிய டவுன்ஷிப் உருவாக்கி வரும் "கார்த்திபுரம்" இதன் டைட்டில் பார்ட்னராக இணைந்துள்ளது. தமிழ்நாட்டை உலகளாவிய வணிக தொழில் மற்றும் முதலீட்டு மையமாக மேலும் வலுப்படுத்தும் நிகழ்வாக இது அமையும் என்பதில் ஐயமில்லை.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இன்று (20.12.2025) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான பி.கே.சேகர்பாபு , மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் , துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், பேரக்ஸ் தெரு, மைதானத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்ட இறகுபந்து உள்விளையாட்டு அரங்கம், கைப்பந்து ஆடுகளம் கூடை பந்து ஆடுகளத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து கூடை பந்து ஆடுகளத்தில் பள்ளி மாணவிகளின் கூடைப்பந்து போட்டியினை தொடங்கி வைத்து வைத்து பார்வையிட்டனர்.



## அனைத்து கிறிஸ்தவ மக்கள் ஒருங்கிணைப்பு நல மையம் சார்பில் "கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்" !

கோவை டிச.23

கோவையில் அனைத்து கிறிஸ்துவ மக்கள் ஒருங்கிணைப்பு நல மையம் சார்பில் பதினைந்தாவது ஆண்டு கிறிஸ்துமஸ் விழா கோவை புலியகுளம் பகுதியில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிறுவனத்தின் நிறுவனத் தலைவர் கோவை சி.எம். ஸ்டீபன் ராஜ் தலைமையில் நடைபெற்ற விழாவில் அகில இந்திய காங்கிரஸ் சிறுபான்மை பிரிவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆந்திர பிரதேசத்தின் பொறுப்பாளர் டி. டென்ஸ்டண் ராஜா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். திரைப்பட நடிகரும், திரைப்படத் தயாரிப்பாளருமான பிரதீப் ஜோஸ் விழாவில் வாழ்த்துரை வழங்கினார்.விழாவில் கிறிஸ்துமஸ் வேடமணிந்த சாண்டா கிளாஸ் பரிசுகள் வழங்கி அனைவரையும் மகிழ்வித்தார்.

மேலும் ஏழை எளிய மக்களுக்காக ஆடைகள், இனிப்புகள், நலத்திட்ட உதவிகள் மற்றும் பிரியாணி வழங்கப்பட்டது. மேலும் இந்த அமைப்பின் நிர்வாகிகளும், ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டு ஒருவருக்கொருவர் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்ததோடு விழாவை சிறப்பாக கொண்டாடினர்.



## திருப்பத்தூரில் ஜம்பு மகரிஷி வழிபாட்டு சங்கம் சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது!

திருப்பத்தூர் டிச.23

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் ஜம்பு மகரிஷி வழிபாட்டு சங்கம் சார்பில் விருது வழங்குதல், நூல் வெளியீட்டு விழா, பாடல் இசை வெளியீடு உள்ளிட்ட முப்பெரும் விழா நடைபெற்றது.

இறைஞானத் தத்துவக் குரு ஜம்புதாச அடிகளார் தலைமையில் சமூக குல பணிகளை பாராட்டி முனிசாமி அவர்களுக்கு குலகுரு ஜம்பு மகரிஷி விருது வழங்கப்பட்டது. இதற்காக மாணவ மாணவிகள் சிலம்பாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், உள்ளிட்டவை மூலம் சிறப்பான வரவேற்பு நடைபெற்றது.

ஜம்பு மகரிஷி நூலாசிரியர் மற்றும் ஜம்பு மகரிஷி போற்றி பாடல் எழுதி இசையமைத்துவருமான முனைவர் மூதுரை பொய்யாமொழி நிகழ்ச்சியினை வரவேற்புரையாற்றி தொகுத்து வழங்கினார்.

அதனை தொடர்ந்து வன்னியர் குல குரு ஜம்பு மகரிஷி வரலாற்று நூல் வெளியீடு மற்றும் போற்றி பாடல் இசை வெளியீடு உள்ளிட்டவை குறித்து முப்பெரும் விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் வழிபாட்டு சங்க பொறுப்பாளர்கள்மற்றும்சுமார்500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஜம்பு தாச அடிகளாரின் ஆசி பெற்றனர்.



## கிருஷ்ணகிரியில் ஓட்டுநர்கள் சங்கம் சார்பில் 23 வது மாவட்ட பொதுக்குழு கூட்டம் !

கிருஷ்ணகிரி , டிச.23

தமிழ்நாடு அரசுத்துறை ஊர்தி ஓட்டுநர்கள் சங்கம், கிருஷ்ணகிரி மாவட்ட கிளையின் 23வது மாவட்ட பொதுக்குழு கூட்டம், மற்றும் 2026 ஆம் ஆண்டு மாத நாட்காட்டி வழங்குதல், மற்றும் ஓய்வு பெற்ற ஓட்டுநர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, மாவட்ட வருவாய் துறை அலுவலர் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. இந்தக்கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் மற்றும் மாநில பொருளாளர் பை.முருகன் தலைமை தாங்கினார். மாநில ஒழுங்கு நடவடிக்கை குழு தலைவர் பெ.ஆண்டி முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் கே.டி.செந்தில் குமார் தீர்மானம் வாசித்தார். அந்தத் தீர்மானத்தில், 31.5.2009க்கு பின் தேர்வு நிலை, சிறப்பு நிலை, முதுநிலை, ஓட்டுநர்களுக்கு ஏற்பட்டுள்ள ஊதிய முரண்பாட்டை போக்கிட வேண்டும் எனவும், பங்களிப்புடன் கூடிய புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வு செய்து திட்டத்தை அமல்படுத்திட வேண்டும் எனவும், அரசுத் துறையில் ஏற்பட்டுள்ள ஓட்டுனர் காலிப் பணியிடங்கள் அனைத்தையும் அரசு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நிரந்தர ஓட்டுநர்களாக நிரப்பிட வேண்டும் எனவும், ஏற்கனவே பணி புரியும் பணியிடங்களில் ஓட்டுநர்களின் தகுதி மற்றும் முன்னுரிமைஅடிப்படையில்நிரந்தரஓட்டுநர்களாக பணி அமர்ந்திட வேண்டும் எனவும், தகுதியும் விருப்பமும் உள்ள ஓட்டுநர்களுக்கு இளநிலை உதவியாளராக பணி மாறுதல் வழங்கிட அரசாணை பிறப்பிக்க வேண்டும் உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கை வலியுறுத்தி தீர்மானங்களாக நிறைவே ற்றப் பட்டது.

முன்னதாக ஊரக வளர்ச்சித்துறையை சேர்ந்த யுவராஜ், சேகர், சுகாதாரத்துறையை சேர்ந்த வீரமணி, வெங்கடாசலம் நஞ்சா ரெட்டி, வருவாய்த்துறை சிவக்குமார் ஆகிய ஓய்வுபெற்றஓட்டுநர்களுக்குநினைவுப்பரிசு வழங்கி கௌரவப்படுத்தினார்கள்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



கோயம்புத்தூர் மாநகராட்சி, காந்திபுரம் பகுதியில் அமைந்துள்ள செம்மொழிப்பூங்கா வளாகத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மருத்துவ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.





# திருப்பத்தூரில் 2097 பேர் உதவி ஆய்வாளர் தேர்வு எழுதினர்!

திருப்பத்தூர் டிச.23

திருப்பத்தூர் மாவட்டம் தூய நெஞ்சக் கல்லூரியில்.உதவி ஆய்வாளர் (SubInspector.SI) தேர்வு என்பது தமிழக காவல்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் (TNUSRB) நடத்தும் ஒரு முக்கியமான தேர்வு ஆகும்,

இது எழுத்துத் தேர்வு மற்றும் உடல் தகுதித் தேர்வைக் கொண்டது, இதில் 1299 பணியிடங்களுக்கான தேர்வு டிசம்பர் 21 இன்று நடைபெற்றது.

இதில் திருப்பத்தூர் மாவட்டத்தை பொருத்தவரையில் இரண்டு இடங்களில் சென்டர் அமைக்கப்பட்டுள்ளது அதில் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் 1578 பெரும் அதே போல வாணியம்பாடி ஜெயின் மகளிர் கல்லூரியில் 519 பெண்கள் பேர் என மொத்தம் 2097 பேர் உதவி ஆய்வாளர் கான தேர்வு எழுதினர்.

# மேட்ரிமோனியல் மூலம் பழகி இளம்பெண்ணுடன் உல்லாசம்!

## ரூ.10 லட்சம், 2.5 பவுன் மோசடி; தொழிலதிபர் மீது கோவை போலீசில் புகார்!!

கோவை, டிச. 23–

மேட்ரி மோனியல் மூலம் அறிமுகமாகி கட்டாயப்படுத்தி உல்லாசமாக இருந்து, ரூ.10 லட்சம் மற்றும் 2.5 பவுன் நகையைபெற்றுமோசடிசெய்தசென்னை வாலிபர் மீது நடவடிக்கை எடுக்க கோரி கோவை போலீஸ் கமிஷனரிடம் இளம் பெண்புகார் அளித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட் டத்தை சேர்ந்தவர் சத்யா (32) (பெயர் மாற்றப்பட் டுள்ளது). இவர் கோவை ஒண்டிப்புதூரில் 2 மகன்களுடன் வசித்து வருகிறார். துணி வியாபாரம் செய்து வருகிறார். நேற்று சத்யா கோவை மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் மனு ஒன்றை அளித்தார். அப்போது அவர் நிரு பர்களிடம் கூறியதாவது: எனக்கு திருமணமாகி 16 வருடங்கள் ஆகிறது. 11ம் வகுப்பு மற்றும் 8ம் வகுப்பு படிக்கும் 2 மகன்கள் உள்ள னர். இந்நிலையில், எனது கணவர் 2022ல் உடல் நலக்குறைவால் இறந்து விட்டார். இதனையடுத்து எனது சகோதரி ஒருவர் எனக்கு மேட்ரிமோனி யல் (திருமண தகவல் மையம்) மூலம் மணமகன் தேடினார். அதில் உள்ள செல்போன் எண் மூலம் கடந்த ஜனவரி மாதம் சென்னையை சேர்ந்த 38 வயது வாலிபர் தொடர்பு கொண்டார். அப்போது அவர் தனக்கு திருமண மாகவில்லை என்றும், உன்னை திருமணம் செய்து கொள்வதாக கூறினார்.

அதன் பின்பு இருவரும் பழகி வந்தோம். அந்த சமயங்களில் அவர் தொழில் தேவைக் காக எனக் கூறி என்னி டம் ரூ.10 லட்சம் மற்றும் 2 பவுன் நகை வாங்கினார். இதனைத்தொடர்ந்து கடந்த மாதம் எனது வீட் டுக்கு வந்த அவர் கட்டா யப்படுத்தி உறவு கொண் டார். பின்னர் அவரது நடவடிக்கையில் மாற்றம் ஏற்பட்டது. என்னுடன் பழகுவதை தவிர்த்து வந் தார். அவர் குறித்து விசா ரித்த போது அவர் ஏற்க னவே திருமணமா னவர் என்றும், இதேபோல் வேறு ஒரு பெ ண்ணை ஏமாற்றிய தாகவும் காவல் நிலையத் தில் புகார் உள்ளது. அவர் திருப்பூரில் பனியன் நிறு வனம் நடத்தி வருவதாக கூறினார். அங்கு சென்று பணம், நகை குறித்து கே ட்டபோது தகாத வார்த் தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுக்கிறார். இதற்கு அவரது பெற்றோ ரும் உடந்தையாக உள்ள னர். என்னை போல் பல ரும் பாதிக் கப்படாமல் இருக்க அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண் டும். இவ்வாறு அவர் கூறினார்.





திருநெல்வேலி அருகே 13 ஏக்கர் நிலப்பரப்பில் 54,296 சதுர அடி பரப்பளவில் ரூ.56.36 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தினை முதலமைச்சர் மு.க. ஸ்டாலி திறந்து வைத்தார். விழாவில்,சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, அமைச்சர்கள் கே.என். நேரு,எ.வ.வேலு,கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்,தங்கம் தென்னரசு,பி. கீதாஜீவன்,அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்,ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்,மா. சுப்பிரமணியன்,த.மனோதங்கராஜ்,நாடாளுமன்றஉறுப்பினர்கள்கனிமொழி,ராபர்ட்புரூஸ்,சட்டமன்றஉறுப்பினர்கள்அப்துல்வகாப்,ரூபிமனோகரன்,ராஜா, பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, , சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் மணிவாசன், , நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொல்லியல் ஆணையர் உதயச்சந்திரன்,அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, தொல்லியல் மற்றும் வரலாற்று வல்லுநர்கள், தொல்லியல் ஆர்வலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# போக்சோவில் கைதான விவசாயி பைக் அடித்து உடைப்பு!

## 3 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு!!

நெல்லை, டிச. 23–

நெல்லை அருகே, போக்சோவில் கைதான விவசாயி வீட்டின் லைட் மற்றும் பைக்கை பாதிக்கப்பட்ட மாணவியின் உறவினர்கள் அடித்து உடைத்தனர். இதில் 3 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். நெல்லையை அடுத்த மானூர் அருகே உள்ள தெற்குப்பட்டியை சேர்ந்தவர் முருகன் (58). இவர் மீது 15 வயது மாணவியை கர்ப்பமாகிய வழக்கில் பாளை ஊரக அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதனால் இவரது குடும்பத்திற்கும்,பாதிக்கப்பட்டமாணவியின்குடும்பத்திற்கும் முன்விரோதம் ஏற்பட்டது.

இந்நிலையில், கடந்த 17ந் தேதி முருகனின் மகன் மகேந்திரன் வீட்டில் தூங்கிக்கொ ண்டிருந்தார். அப்போது, அங்கு மாணவியின் உறவினர்கள் 3 பேர் கையில் மரக்கட்டைகளுடன் வந்துள்ளனர். அவர்கள் வீட்டின் முன்பு நின்று ஆபாசமாக பேசியதோடு, கொலை மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படுகிறது. பின்னர் வீட்டின் வெளியே நிறுத்தியிருந்த பைக் மீது பெரிய கல்லைப் போட்டு சேதப்படுத்தியுள்ளனர். தொடர்ந்துமின்விளக்குகளை அடித்து நொறுக்கியுள்ளனர். இச்சம்பவம் குறித்து மகேந்திரன் அளித்த புகாரின் பேரில், மானூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# தெருநாய்கள் கடித்ததில் 4 ஆடுகள் உயிரிழப்பு!

## இழப்பீடு வழங்க கோரிக்கை!!

ஈரோடு,டிச.23–

வில்லரசம்பட்டி கிரீன் கார்டன் பகுதியைச் சேர்ந்தவர் பழனிசாமி. விவசாயியான இவர், தனது தோட்டத்தில் ஆடுகள், கோழிகளை வளர்த்து வருகிறார். இந்நிலையில், தோட்டத்தில் உள்ள பட்டியில் ஆடுகள் மற்றும் கோழிகளை அடைத்துவிட்டு இரவு வீட்டுக்குச் சென்றுள்ளார். காலை வந்து பார்த்தபோது, பட்டியில் இருந்த 4 ஆடுகளும் காயங்களுடன் இறந்து கிடந்தன.

மேலும், 10க்கும் மேற்பட்ட நாட்டுக்கோழிகளையும் காணவில்லை, இதையடுத்து, ஈரோடு கால்நடைத் துறை மருத்துவர்கள், மாநகராட்சி அதிகாரிகள், வில்லரசம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் அப்துல் ஆகியோருக்கு விவசாயி பழனிசாமி தகவல் தெரிவித்தார். சம்பவ இடத்துக்கு வந்த கால்நடை மருத்துவர்கள், ஆடுகளை கூறாய்வு செய்தனர்.

இதில், ஆடுகளை தெருநாய்களைக் கடித்து குதறியதும், கோழிகளைத் தூக்கிச் சென்றதும் தெரிய வந்தது.

வில்லரசம்பட்டி பகுதியில் சுற்றித்திரியும் தெருநாய்கள் இந்த நாய்களை அப்புறப்படுத்த வேண்டும் என்றும், ஆடுகளுக்கு காப்பீடு திட்டத்தை செயல்படுத்தி இழப்பீடு ஈடு வழங்க வேண்டும் என்றும் கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். வில்லரசம்பட்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தெருநாய்கள் கடித்து குதறியதில் கடந்த ஓராண்டில் 60க்கும் மேற்பட்ட ஆடுகள், ஒரு பசு மாடு, 100க்கும் மேற்பட்ட நாட்டுக்கோழிகள் உயிரிழந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

# களக்காடு அருகே தங்க நகைகள் திருட்டு!

களக்காடு, டிச.23

களக்காடுஅருகேஉள்ளஆதிச்சபேரி,தெற்குதெருவை சேர்ந்தவர் அன்னமணி (77),ஓய்வு பெற்ற ஆசிரியை. இவருக்கு திருமணம் ஆகாததால், தனது தம்பி செல்வராஜ் பராமரிப்பில் இருந்து வருகிறார். சம்பவத்தன்று அன்னமணி திருமண வீட்டிற்கு சென்று விட்டு வந்து, தனது தங்கசெயின், 3 வளையல்களை கழற்றி, ஒரு பர்சில் வைத்து, கட்டில் மீது வைத்து விட்டு தோட்டத்திற்கு சென்று விட்டார். மாலையில் திரும்பி வந்து பார்த்தபோது, தங்கநகைகள் வைக்கப்பட்டிருந்த பர்ஸ் மாயமாகியிருந்தது. மர்ம நபர்கள் பர்சுடன் தங்கநகைகளை திருடி சென்று விட்டனர்.

இவைகளின் எடை ஏழரை பவுன், மதிப்பு ரூ 7 லட்சம் ஆகும். இதுகுறித்து அன்னமணி அளித்த புகாரின்பேரில் களக்காடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.



# ஆற்காடு அங்காளம்மன் கோவிலில் ஊஞ்சல் உற்சவம் திரளான பக்தர்கள் சாமி தரிசனம்!

கண்டாச்சிபுரம். டிச.23

ஆற்காடு கிராமத்தில் உள்ள பிரசித்தி பெற்ற அங்காளம்மன் கோவிலில் மாதந்தோறும் அமாவாசை விழா வெகு விமரிசையாக நடைபெறும்.

அதன்படி மார்கழி மாத அமாவாசை விழாவையொட்டி நேற்று முன்தினம் ஊஞ்சல் உற்சவம் நடைபெற்றது. இதனை முன்னிட்டு அதிகாலையில் கோவில் நடை திறக்கப்பட்டு, கருவறையில் உள்ள அம்மனுக்கும், சிவபெருமானுக்கும் பால், தயிர், சந்தனம், மஞ்சள், குங்குமம், விபூதி, இளநீர், பஞ்சாமிர்தம், தேன், பன்னீர் உள்ளிட்ட பல்வேறு வகையான வாசனை திரவிய பொருட்களால் அபிஷேகம் செய்யப்பட்டு, சாமிக்கு தங்க கவசம் அணிவிக்கப்பட்டது. அதன்பிறகு உற்சவ அம்மனுக்கு பலவகை பூக்களைக் கொண்டு தில்லை காளி அம்மன் அலங்காரம் செய்யப்பட்டு, கோவில் உட்பிரகாரத்தில் பக்தர்களுக்கு அம்மன் காட்சி அளித்தார். அதன் பின்னர் இரவு 11 மணியளவில் உற்சவ அங்காளம்மன் பம்பை, மேளதாளம் முழங்க வடக்கு வாசல் வழியாக ஊஞ்சல் மண்டபத்தில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் எழுந்தருளினார்.

அதனை தொடர்ந்து பூசாரி வேலாயுதம் பக்தி பாடல்களை பாடினர். அப்போது அம்மன் ஊஞ்சலில் முன்னும் பின்னும் அசைந்தாடியபடி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதைக் கண்ட பக்தர்கள் கற்பூரம் ஏற்றி, ஓம் சக்தி அங்காளம்மா. ஓம் சக்தி அங்காளம்மா என்ற பக்தி கோஷங்களை எழுப்பினர். இதையடுத்து நள்ளிரவு 12 மணியளவில் தாலாட்டு பாடல் பாடி அம்மனுக்கு அர்ச்சனை செய்து, மகா தீபாராதனை காண்பித்தவுடன் ஊஞ்சல் உற்சவம் முடிவடைந்தது. அதன்பின்பு அம்மன் உட்பிரகாரத்துக்கு கொண்டு செல்லப்பட்டார். மார்கழி மாத அமாவாசை என்பதால் திரளான பக்தர்கள் சுற்றுவட்டாரப் பகுதி பக்தர்கள் மற்றும் பெரும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மன் தரிசனம் செய்தனர். தரிசனம் செய்த பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. அமாவாசை ஊஞ்சல் விழாவினைக்கான ஏற்பாடுகளை கோவில் சாமியார் AVM வேலாயுதம் மற்றும் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.



# கிருஷ்ணகிரியில் கற்போம் கற்பிப்போம் சேவை மையம் பொதுக்குழு கூட்டம்!

## பி.சி.சேகர் மீண்டும் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்!!

கிருஷ்ணகிரி டிச: 23

கிருஷ்ணகிரியில் கற்போம் கற்பிப்போம் சேவை மையம் பொதுக்குழு மற்றும் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுத்தல் கூட்டமான உறவுகளின் சங்கமம் நிகழ்வு நடைபெற்றது. அமைப்பின் கௌரவத் தலைவர் ரங்கராஜ் முன்னிலையில் அமைப்பின் தலைவரும் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவருமான பி.சி.சேகர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது

இதில் கற்போம் கற்பிப்போம் சேவை மையத்தின் பொதுக்குழு மற்றும் புதிய நிர்வாகிகள் தேர்வில் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் பி.சி.சேகர் மீண்டும் தலைவராக ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். இதில் பி.சி.சேகர் மீண்டும் மைய தலைவராக தேர்வானதையடுத்து அவருக்கு நிர்வாகிகள் பலர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். மேலும் இந்தக் கூட்டத்தின் வாயிலாக தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கிராமங்களில் மிகவும் பின் தாங்கிய நிலையில் உள்ள இந்தக்கல்வியை மேம்படுத்தும் நோக்கிலும், ஏழ்மை நிலையில் இருந்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட வேண்டியும், சுகாதாரம் பண்பாடு கலாச்சாரம் நல்ல ஒழுக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மேலும் உறவுகள் உடைய மகன் மற்றும் மகள்களுக்கு முறையான திருமண வரன்களை ஏற்படுத்தித் தருதல் போன்ற கருத்துக்களை இந்தக் உறவுகளின் சங்கம் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும் வரும் ஜனவரி இறுதியில் அதிகளவு உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து புதிய நிர்வாகிகளாக கௌரவத் தலைவர் ரங்கராஜ், செயல் தலைவர் காமராஜ், பொதுச்செயலாளர் ராஜன், பொருளாளர் நாகராஜன், துணைத் தலைவர்களான காமராஜ், துரைசாமி, துணை பொது செயலாளர் முருகன், தலைமை நிலைய செயலாளர் பாரதி, பிரச்சார செயலாளர் சஞ்சீவன், இளைஞர் அணி செயலாளர் மகேந்திரன், மகளிர் அணி செயலாளர் கலைவாணி, துணைச் செயலாளர் வாணி, செயற்குழு உறுப்பினர் சீனிவாசன், அமைப்பு செயலாளர் மணிவண்ணன், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பாளர் சுவாமிநாதன், உள்ளிட்டோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்தனர். பின்னர் புதிய நிர்வாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து , தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். இறுதியாக முருகன் நன்றி உரையாற்றினார்.



# உதயேந்திரம் பேரூர் வாக்குச்சாவடி 141 ல் தி.மு.க. தேர்தல் தெருமுனை பரப்புரை கூட்டம்!

வாணியம்பாடி டிச: 23

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி உதயேந்திரம் பேரூர் வார்டு 5 மேட்டுத் தெருவில் உள்ள பூத் எண் 141 என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி பரப்புரையில் தேர்தல் பணிகள் குறித்தும் புதிய வாக்காளர்களை சேர்ப்பது குறித்தும் மற்றும் திமுக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு உதயேந்திரம் பேரூர் திமுக செயலாளர் ஆ செல்வராஜ் தலைமை வகித்தார்அவைத்தலைவர் குமார் மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர் கோவி. அசோகன் தென்றல் தமிழரசன் பேரூர் கழக பொருளாளர் மீர் முகமது கனி ஒன்றிய பிரதிநிதி செந்தில்குமார் மனோகரன் முன்னிலையில் கிளை கழக செயலாளர் சரவணன் அம்பலவாணன் மாவட்ட பிரதிநிதிகள் மேகநாதன் இளைஞர் அணி சிலம்பரசன் மாவட்ட துணை அமைப்பாளர் குமரேசன் முருகன் பேரூர் கழக நிர்வாகிகள் ஜோசப் தாஸ் சசிகுமார் ரமேஷ் சசிகுமார் இளங்கோ சௌந்தர் ஆனந்தன் கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் செந்தில்குமார் மனோகரன் ஆசிரியர் மஞ்சு முருகேசன் ஆப்பிள் ஆசிரியர் லட்சுமி காந்தன் ரவி குமரேசன் மீர் ஜாயித் அலி ராஜேந்திரன் ஞானப்பிரகாசம் பழனி ராஜா உலகநாதன் திலீப் முஜிமில் அலிநகை அலிமுகமது நவாப் பாய் அலி ஜாபர் மீர் காசிப் அலி மீர் ஜாய் அலி பாபு கழக நிர்வாகிகள் மகளிர் அணி உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.





கிருஸ்துமஸ் தின விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை கோவை மருதமலை திருக்கோவில் அடிவாரத்தில் அமைந்துள்ள விமல் ஜீவன் சாந்தி தொழுநோய் நல சங்கத்தை சார்ந்த தொழுநோயாளிகள் சுமார் 50த்திற்கும் மேற்பட்டவர்களுக்கு அரிசி,பருப்பு,மளிகை பொருட்கள் மற்றும் பண்டிகை பரிசு தொகை கோவை வடக்கு மாவட்ட சிறுபான்மை நல பிரிவு தலைவர் ஆரோக்கிய ஜான் வழங்கினார். அப்போது விமல் ஜோதி பள்ளி மற்றும் மருத்துவ மனையை சார்ந்த அருட் சகோதரிகள் உடனிருந்தனர்.



# மத்திய அரசை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் மெழுகுவர்த்தி ஏந்தி பேரணியாக சென்றனர்!

திருப்பத்தூர் டிச.23

திருப்பத்தூர்மாவட்டம் திருப்பத்தூர்பாரதஸ்டேட் வங்கி எதிரில் மத்திய பாஜக அரசு கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தின் பெயரை அவமதிக்கும் வகையில் பெயரை மாற்றியதையும் கண்டித்து ராகுல் காந்தி, சோனியா காந்தி, ஆகியோர் மீது அமலாக்கத்துறையினர் பொய்யான வழக்குகளை தொடுத்ததின் காரணமாக உச்ச நீதிமன்றம் அவர்கள் எந்த குற்றமும் செய்யவில்லை என அமலாக்க துறைக்கு எதிராக தீர்ப்பு வந்தது இதனை கண்டித்து திருப்பத்தூர் காங்கிரஸ் கமிட்டி நகரதலைவர் பரத் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் பிரபு கலந்து கொண்டு கண்டன கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

பின்னர் பாரத ஸ்டேட் வங்கி எதிரில் இருந்து. காமராஜர் சிலை வரை மெழுகுவர்த்தி ஏந்தி பேரணையாக வந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 100க்கும் மேற்பட்ட காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர் சந்திப்பில் மாவட்ட தலைவர் பிரபு கூறுகையில்,

அமலாக்கத் துறையினர் பொய்யான வழக்குகளை கொடுத்துள்ளனர் பொது மக்களை சேர்த்து அமலாக்கத்துறை மீது போர் செய்வோம் என எச்சரிக்கை விடுத்தார்.



# பெரியார் சிலை அமைக்க ரூ.1 லட்சம் நிதி!

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் முன்னாள் தலைவர் எல். சுப்பிரமணியன் வழங்கினார்!!

கிருஷ்ணகிரி,டிச.23

தந்தை பெரியாரின் அருந்தொண்டை உலகறியச் செய்யும் வகையில் திருச்சி சிறுகனூரில் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் 'பெரியார் உலகம்' அமைய உள்ளது.

இப்பெரும் பணிக்காக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினருமான எல். சுப்பிரமணியன் திருச்சி சிறுகனூரில் நடைபெற்று வரும் "பெரியார் சிலை அமைக்கும் பணிக்காக தனது குடுப்பம் மற்றும் தனது தாய் தந்தையான காவேரிப்பட்டினத்தை சேர்ந்த லோகநாதன்முனியம்மாள்" ஆகியோரின் நினைவாக ரூ 1 இலட்சம் ரூபாய் நன்கொடையை திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் ஊமை ஜெயராமன், மாவட்டத் தலைவர் திராவிடமணி, மாவட்டச் செயலாளர் கோ.திராவிடமணி ஆகியோரிடம் வழங்கினார்.



நீலகிரி மாவட்டம் பந்தலூர் பகுதியில் பந்தலூர் பிரிமியர் லீக் சீசன் 4 சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி 3 நாள் நடத்தப்பட்டது . இதில் இறுதி போட்டியில் மைட்டி பிளாஸ்டர்ஸ் அணியினர் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது.

# திருப்பத்தூர் வாக்குச் சாவடி பாகம் எண் 87ல் தேர்தல் விழிப்புணர்வு தெருமுனை பரப்புரை!



திருப்பத்தூர் டிச.23

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரம், வார்டு 20,பாகம் 87ல் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி,

தமிழ்நாடு தலை குனியாது என்ற முன்னெடுப்பில், வார்டு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நகர திமுக செயலாளர் வழக்கறிஞர்.சு.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் ஜோதி ராஜன், நகர மன்ற உறுப்பினர் திருமதி. ரேவதி பாலாஜி , மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஜெயசீலன் , ரமேஷ் வார்டு செயலாளர்.சரவணன் பாக முகவர்கள் வார்டு நிர்வாகிகள் , கட்சியின் முன்னோடிகள் கலந்துகொண்டனர்.



நாமக்கல் மாவட்டம் மோகனூர் மற்றும் பரமத்தி ஒன்றிய பகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க.வினர் 30 பேர் அக்கட்சியில் இருந்து விலகி முன்னாள் அமைச்சரும், மாவட்ட தி.மு.க. மேற்கு மாவட்ட பொறுப்பாளருமான செந்தில்பாலாஜி , முன்னாள் எம்.எல்.ஏ. கே.எஸ்.மூர்த்தி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

# பிளிப்கார்ட்–என்சிவிஇடி–திறன் மேம்பாட்டு அமைச்சக கூட்டாண்மை!



சென்னை,டிச.23

இந்தியாவின் உள்நாட்டு இகாமர்ஸ் நிறுவனமான பிளிப்கார்ட், நாட்டின் திறன் மேம்பாட்டுச் சூழலை வலுப்படுத்தவும்,ஸ்கில்இந்தியாமிஷன்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவும், தேசியத் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்சிவிஇடி) உடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. புதுதில்லி கௌஷல் பவனில் நடைபெற்ற இந்த நிகழ்வில், திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் (எம்எஸ்டிஇ) மற்றும் என்சிவிஇடி மூத்த அதிகாரிகள் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. எம்எஸ்டிஇ செயலாளரும், என்சிவிஇடி தலைவருமான செல்வி தேபஸ்ரீ முகர்ஜி அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த கூட்டாண்மையின் மூலம், இந்தியாவின் இகாமர்ஸ் துறையில் முதல்முறையாக பயிற்சி, மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்கும் இரட்டை அமைப்பு (Awarding & Assessment Body) அங்கீகாரத்தைப் பெற பிளிப்கார்ட் முயற்சி மேற்கொள்கிறது. இதன்மூலம், NSQFக்கு இணக்கமான, தொழில்துறை சார்ந்த பயிற்சித் திட்டங்கள் தேசிய அளவில் அங்கீகாரம் பெறும். இந்நிகழ்வில் பிளிப்கார்ட் குழுமத்தின் முதன்மை கார்ப்பரேட் விவகார அதிகாரி திரு. ரஜ்னீஷ் குமார், என்சிவிஇடி நிர்வாக உறுப்பினர் பேராசிரியர் (டாக்டர்) அசோக் குமார் காபா, என்சிவிஇடி இயக்குனர் லெப்டினன்ட் கர்னல் விக்ரம் சிங் பாட்டி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திறன் மேம்பாட்டை உருவாக்கி, எதிர்காலத்திற்குத் தயாரான, உலகளவில் போட்டித்தன்மை கொண்ட இந்திய பொருளாதாரம் உருவாக இந்த பிளிப்கார்ட் –என்சிவிஇடி கூட்டாண்மை முக்கிய பங்கு வகிக்கும்.

# ரோட்டரி பவுண்டேஷன் குளோபல் கிராண்ட் சார்பில் லீமா மார்டின் பாலி கிளினிக்!



கோவை,டிச.23

கோவை ரோட்டரி பவுண்டேஷன் குளோபல் கிராண்ட் சார்பில் லீமா மார்டின் பாலி கிளினிக் மருத்துவமனை இன்று திறக்கப்பட்டது. இந்த மருத்துவமனையை டாக்டர்.முத்தூஸ் மல்டி ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல் நிர்வகித்து நடத்துகிறது. மருத்துவமனையை மார்டின் குழும இயக்குனர் லீமாரோஸ் மார்டின் திறந்து வைத்தார்.

மருத்துவமனை பற்றி லீமா ரோஸ் மார்டின் கூறுகையில், நாங்கள் பல்வேறு சமூக சேவைகள் இதுவரை செய்துள்ளோம். ஆனால் மருத்துவமனை அமைப்பது எங்களது நீண்ட கால முக்கிய கனவாக இருந்தது. அத்தகைய முயற்சியை இன்று டாக்டர்.முத்தூஸ் மருத்துவமனை மூலம் நிறைவேற்றியுள்ளோம் என்றார். மருத்துவர். முத்து சரவணகுமார் பேசுகையில், சுமார் 8 வருடங்களுக்கு முன்பு இந்த பணிகள் குறித்து பேசினோம்,தற்போது அது நிறைவேறி உள்ளது. லீமா மார்டின் பாலி கிளினிக் மூலம் ஏழை எளிய மக்களுக்கு குறைவான கட்டணத்தில் மருத்துவ சேவை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம் என கூறினார். இந்த நிகழ்வில் ப்ராஜெக்ட் சேர்மன் கவிதா கோபாலகிருஷ்ணன், டிஸ்ட்ரிக்ட் சர்வீஸ் ப்ராஜெக்ட் தலைவர் மயில்சாமி, டிஸ்ட்ரிக்ட் டைரக்டர் சம்பத்குமார், அசிஸ்டன்ட் கவர்னர் கோபாலகிருஷ்ணன், ஜி.ஜி.ஆர் ஜெகதீஸ்வரன், ரோட்டரி கிளப் ஆப் ஆக்ருதி தலைவர் மது கண்ணன், செயலாளர் வித்யாலட்சுமணன், ரோட்டரி கிளப் ஆஃப் ஆலம் தலைவர் அமுதா, நிர்வாக செயலாளர் ரகுநாதன் சுப்பையா உட்பட டாக்டர். முத்தூஸ் மருத்துவமனை மருத்துவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பாலக்கோட்டில் நைட் பிரியாணி கடை! கே.பி.அன்பழகன் எம்.எல்.ஏ. ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்!!

பாலக்கோடு,டிச.23

தர்மபுரிமாவட்டம், பாலக்கோடு தக்காளிமண்டி எதிரில் புகழ் பெற்ற நைட் பிரியாணி கடை திறப்பு விழா முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் எம்.எல்.ஏ தலைமையில் நடந்தது.

நிகழ்ச்சிக்கு பாஜக நகர தலைவர் கணேசன் முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில் முன்னாள் அமைச்சர், பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினர் கே.பி. அன்பழகன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்து பொதுமக்களுக்கு சுவையான பிரியாணியை வழங்கினார்.

சிறப்பு அழைப்பாளர்களாக பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி, முன்னாள் பாஜக மாவட்ட தலைவர் பாஸ்கரன், தேமுதிக மேற்கு மாவட்ட செயலாளர் விஜயசங்கர், திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் ஆனந்தன், அதிமுக நகர செயலாளர் ராஜா, பாமக நகர செயலாளர் ராஜசேகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர் அனைவருக்கும் பிரியாணி வழங்கப்பட்டது.



# மாதகடப்பா ஊராட்சி வாக்குச் சாவடி பாகம் எண் 5ல் தேர்தல் விழிப்புணர்வு பரப்புரை!

வாணியம்பாடி டிச.23

திருப்பத்தூர்மாவட்டம், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய, தி.மு.க.சார்பில் மாதக்கடப்பா ஊராட்சியில், பாகம் எண் 5ல் உள்ள வாக்குச்சாவடியில் நடைபெற்ற, தமிழ்நாடு தலைகுனியாது தேர்தல் பரப்புரையில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி என்ற முன்னெடுப்பு தெருமுனை பரப்புரை நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு, ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வி எஸ். ஞானவேலன், கூட்டம் ஏற்பாடுகளை செய்து இக்கூட்டத்திற்கு தலைமைதாங்கினார். திமுக அரசின் சாதனைகளை, பொதுமக்களிடம் சிறப்புரை நிகழ்த்தினார்.இந்நிகழ்ச்சியில்,தலைமை செயற்குழு உறுப்பினர் அசோகன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கோவிந்தம்மாள் பெருமாள், ஒன்றிய அவைத் தலைவர் ராமநாதன், ஒன்றிய துணை செயலாளர்கள் குமார், சோபா. வெங்கடேசன், ஒன்றியபொருளாளர் தசரதன், மாவட்ட பிரதிநிதி சி.சிவகுமார், ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டேம்.டி. வெங்கடேசன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உடன்,ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஞானசேகர், ஒன்றிய அமைப்புசாரா ஓட்டுனர் அணி செல்வராஜ், மற்றும் கட்சியின் மூத்த முன்னோடிகள் கிளை செயலாளர்கள். வெங்கடேசன், ரஜினி,கிளை நிர்வாகிகள் முனிவேல்,ராஜாமணி,கிருஷ்ணமூர்த்தி, குமார், முனியப்பா ,நாராயணன்,ராஜேந்திரன்,சிவகுமார்,கார்த்திக்,ராஜா,சிரஞ்சீவி,பாலாஜி, உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைத்து அணிகளின்அமைப்பாளர்கள் முரளிகுமார், ராஜேஷ் பூத் இளைஞர் அணி சுரேஷ், செரக்கண்டி, சந்தானம், பி.எல்.சி.நிர்வாகிகள் சுரேஷ், ஆகிய அனைத்து அணிகள் அமைப்பாளர்கள், துணை.அமைப்பாளர் கள் மற்றும் கட்சியின் முன்னோடிகள், பொதுமக்கள், திரளாக கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரிமாவட்டம்பர்கூர்அடுத்தசின்னமொட்டாரப்பள்ளிஊராட்சிஒன்றியத்திற்கு உட்பட்ட கிருஷ்ணகிரி – குப்பம் தேசிய நெடுஞ்சாலையில் ரூ. 22 லட்சம் மதிப்பீட்டில் புதிய பாணியர் நிழல் கூடம் மற்றும் புதிய நாடக கலை அரங்க மேடை கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் முன்னாள் சபாநாயகர் தம்பிதுரை கலந்து கொண்டு பேசினார். இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சிவி ராஜேந்திர, ஒன்றியம் கிளை பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் ஜே.சி.ஐ சார்பில் திறமையான பொது பேசும் பயிற்சி நிகழ்ச்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பைலட் ஆசிரியர் கணேசன் மற்றும் கோபைலட் ஆசிரியர் வீ. சந்தினி சிறப்பாக பயிற்சியளித்தனர். அவர்கள் வழங்கிய உள்ளடக்க விளக்கமும், நடைமுறை வழிகாட்டுதல்களும் அனைவராலும் பாராட்டப்பட்டன.நிகழ்ச்சியில்சிறந்துவிளங்கியபங்கேற்பாளர்கள்அங்கீகரிக்கப்பட்டனர்., நிகழ்ச்சியில் ஜே.சி.ஐ எலைட் தலைவர் விக்னேஷ்கருணாநிதி செயலாளர் கார்த்திக் பொருளாளர்சிவானந்தன்மற்றும்திட்டஇயக்குநர்கள்கோபிநாத்மற்றும்ஸ்ரீதர்தலைமையில் சிறப்பாக முன்னெடுத்தனர்.